**MCOP NO:70/2020 DATE:30.09.2024**

ம.சா.1

பெயா்.ஜகதா

க/பெ.திரு. சங்கா் நாராயணன்

வயது. 45

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 15 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

03.12.2019 அன்று காலை 11 மணியளவில் பாரதி நகா் பேருந்து நிறுத்தம் அருகே இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு கையிலும், காலிலும் அடிப்பட்டு காயங்கள் ஏற்பட்டது. நான் M.Phil படித்துள்ளேன். லக்சரா் வேலை செய்து வந்தேன். 2017 முதல் அந்த பணி செய்கிறேன். இந்த விபத்தினால் என்னை வேலையில் இருந்து நீக்கிவிட்டாா்கள். பொதுமக்கள் ஆம்புலன்ஸ் வரவழைத்து என்னை மருத்துவமணையில் சோ்த்தாா்கள். காமாட்சி மருத்துவமணையில் 03.12.2019 முதல் 06.12.2019 வரை சிகிச்சை பெற்றேன். அதன்பிறகு அதே மருத்துவமணையில் வெளிநோயாளியாக தற்போது சிகிச்சை பெற்று வருகிறேன். எனக்கு மருத்துவகாப்பீடு இல்லை. என்னுடைய கணவருடைய விபத்து காப்பீடு பாலிசி மூலம் பாதிதொகை மட்டும் கொடுத்தாா்கள் மீது தொகை கொடுக்கவில்லை. அந்த தொகையை பில்லில் அட்ஜஸ்ட் செய்து கொண்டாா்கள். கிண்டி காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. விபத்திற்கு 1ம் எதிா்மனுதாராின் ஒட்டுநா் காரணம் இல்லை என்றும், அதனால் 2ம் எதிா்மனுதாரா் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவா் இல்லை என்றால் சாியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**X**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.